நம்முடைய பஸ்கள் அடிபட்டு நொறுங்கிப் போகாமல் இருப்பதற்காகவாவது " easy facility for traffic negotiation " என்ற அளவில் மறுபடியும் பரிசீலித்து ஒரு சில கட்டங்களை ஆர்ஜிதம் செய்தாவது, அந்த செலவை ஏற்றுக்கொண்டாவது இது பற்றி மறு பரிசீலனை செய்ய முடியுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கனம் உறுப்பினர் அவர்களுடைய பழைய பாசத்திற்காக மிகுந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது போன்ற பெருந்து வழித் தடங்களை விரிவு படுத்துவதற்காகவும், சீர்படுத்துவதற்காகவும் மாநகராட்சிக்குக் கடனாகவும், மானியமாகவும் அரசு தொகை வழங்குகிறது. 1967-68-ம் ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாய மானியமாகவும், 5 லட்சம் ரூபாய் கடனாகவும் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் அவர்கள் திட்டமிட்டுச் செயலாற்றுகிறார்கள். கனம் உறுப்பினர் அவர்கள் மாநகராட்சி மன்றத்தை அணுகி இந்தத் திட்டத்தை விரைவுபடுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

DR. H. V. HANDE : Sir, this particular area, Old Mambalam which happens to be in the constituency of our Hon. Minister for Public Works, is something like a Cinderella of the Madras City. It is a most neglected area and nobody is bothered to rectify the situation there. In spite of petitions sent to the Government—we have sent a petition to the Hon. Minister for Public Works also—and in view of the tragic situation there, will the Hon. Minister for Local Administration go a little out of the way and pull up the Corporation and see that it is rectified there? If the Corporation cannot do it, will he and the Hon. Minister for Public Works take some immediate and concrete steps in the matter?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : டாக்டர் ஹாண்டே அவர்கள் என் தொகுதிக்காக இவ்வளவு பரிந்து பேசுவதுபற்றி என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனம்

*46 வினு.—**திரு. ஏ. எம். ராஜா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்யச் சென்ற கதர்போர்டு தணிக்கை ஊழியர்களை மேற்படி சம்மேளனத்தின் காரியதரிசி அனுமதி மறுத்தது உண்மையா?

(இ) ஆம் எனில், அரசும் கதர் போர்டும் மேற்கொண்டு கணக்குகளைத் தணிக்கை செய்ய எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். ராஜா: இந்தச் சம்மேளனம் சட்டப்படி கூட்டுறவுத் தணிக்கையில் வருகிறதா? ஆம் எனில், இதுவரை எவ்வளவு தடவை கூட்டுறவுத் தணிக்கை செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: கூட்டுறவுச் சம்மேளனக் கணக்குகள் கூட்டுறவு தணிக்கையில் தணிக்கை செய்யப்படுகிறது. 1963-64-க்கு தணிக்கை செய்யப்பட்டிருக்கிறது. 1964-65-க்கான தணிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. கொளத்தூர் கோதண்டம்: செங்கல்பட்டு மாவட்ட பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? அது எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அந்தக் கோரிக்கையின் மீது பரிசீலனை நடைபெற்று வருகிறது. பரிசிலனை முடிந்த பிறகு திட்டமான முடிவு எடுக்கப்படும்.

திரு. கே. பி. எஸ். மணி: தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் பதனீரிலிருந்து பனைவெல்லம் செய்தால் அதில் லாபம் இல்லை என்று அங்குள்ள கூட்டுறவுச் சங்கங்களால் முடிவு செய்யப்பட்டு இப்போது அதைக் கள்ளாகவே விற்று வருகிறார்கள். ஆகவே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பனைவெல்ல கூட்டுறவுச் சங்கச் செலவிற்காக இருக்கிற தனி நிர்வாகத்தை நீக்கிவிட்டால் அது அரசுக்கு லாபகரமாகக்கூட இருக்கும் என்ற கருத்தை ஏற்று அதன் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: பனை மரங்களிலிருந்து எடுக்கப்படுகிற பதனீரிலிருந்து வெல்லம் தயாரிக்க முடியவில்லை என்ற குற்றச்சாட்டு எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை. ஒரு வேளை கள் இறக்குவதற்காக அப்படிப்பட்ட சமாதானங்களைச் சொல்லக்கூடும். அதுபற்றியெல்லாம் திட்டமாக அறிவித்தால் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: பனைவெல்லம் காய்ச்சுவது அவ்வளவு கட்டுபடியாகவில்லை என்று ஒரு உறுப்பினர் கேட்டார் அதற்கு அமைச்சர் அவர்களும் ஏதோ பதில் சொன்னார்கள். பதனீர் விற்பதற்கு பலயிடங்களில் ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஒரு உறுப்பினர் ஏதோ கேட்டார் என்றும் அமைச்சர் ஏதேதோ சொன்னதாகவும் சொன்னார்கள். கேட்ட கேள்விக்கு உரிய விடை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பதனீராகவும் விற்கப்படுகிறது, பனைவெல்லமாகவும் விற்கப்படுகிறது. கட்டுபடியாகவில்லை என்று ஏதோ ஒரு குறை சொல்லப் பட்டாலும் பலயிடங்களில் அது நல்ல லாபகரமாக நடந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1968 பிப்ரவரி 15]

திரு. எஸ். ஜே. ராமசாமி : நஷ்டக்கணக்காக இருக்கிறதே என்பதற்காகத் தெரிவித்துக்கொண்டேனே தவிர வியாக்கியானம் செய்யவில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவைப் போடுங்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : நான் கேட்கும்போது ஏதோ என்ற ஒரு வார்த்தையைச் சொன்னேன். அதற்கு அமைச்சர் அவர்கள் ஏதேதோ என்று சொல்வது சரியல்ல என்று சொன்னார்கள். ஏதோ என்று சொன்னது நஷ்டக் கணக்காக இருக்கிறதே என்பதற்காகச் சொன்னேனே தவிர வேறு ஒன்றுமில்லை என்பதை அமைச்சர் அவர்களுக்கு தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பர்சனல் எக்ஸ்ப்ளனேஷனா ?

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பனை ஏறுகிற தொழிலுக்கு லைசென்ஸ் முறை வைத்திருக்கிற காரணத்தினால் அனாவசியமான முறையில் அந்த ஏழைத் தொழிலாவர்கள்மீது சந்தேகக் கேஸ்கள் போடுகிற வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே, அந்த முறையை ரத்து செய்ய வேண்டுமென்று பலமுறை இங்கு கேட்டும் இதுவரை செய்யவில்லை. ஆகவே இந்த லைசென்ஸ் முறையை ரத்து செய்ய நமது அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இதுபோன்ற அனுமதிகள் வழங்கப்படுகிற நிலையில் கூட குறைகள் இருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அதுவும் இல்லை என்ற நிலை ஏற்படுமானால் அந்தக் குறை மேலும் அதிகமாகிவிடும் என்ற அச்சம் காரணமாக அது அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்லப்படுகிறது. வழங்குவதில் உள்ள நிர்வாகச் சிக்கல்களைக் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால் அவற்றை உடனடியாகத் தீர்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அதை ரத்து செய்கிற உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

உ. அறிவிப்பு.

உலகத் தொழில்-பொருட்காட்சிக்கு அழைப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு அறிவிப்பு. சென்னையில் அறிஞர் அண்ணா நகரில் நடைபெறுகிற உலகத் தொழில்-பொருட்காட்சிக்கு வருகை தரவேண்டுமென்று பேரவை உறுப்பினர்கள் எல்லோரையும் பொருட்காட்சித் தலைவர் அவர்கள் அழைத்துள்ளார்கள். எனவே, 16-2-1968, 17-2-1968 இரண்டு நாட்களிலும்